செய்தி வெளியீடு எண்: 148 நாள்:24.05.2021

**தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்,
ஆவின் இல்லம், நந்தனம், சென்னை – 35.**

கொரோன தாக்கத்தின் காரணமாக 24.05.2021 முதல் 31.05.2021 வரை தமிழகம் முழுவதும் தளர்வில்லா ஊரடங்கு உத்தரவு தமிழக அரசினால் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த ஊரடங்கின் போது பொது மக்களுக்கு தேவையான பால் விற்பனை செய்வதற்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த நெருக்கடியான சூழ்நிலையில் பொது மக்களுக்கு எவ்வித சிரமுமின்றி பால் மற்றும் பால் உபபொருட்கள் கிடைக்க, கீழ்கண்ட நடவடிக்கைளை ஆவின் நிர்வாகத்தால் எடுக்கப்பட்டுள்ளது.

- சென்னை மாநகரில் சுமார் 1000 பால் டெப்போக்கள் மூலம் பால் விநியோகம் நடைபெற்றுவருகிறது ,மேலும் ஆவின் நிர்வாகத்தால் 38 பாலகங்கள் மூலம் பால் மற்றும் பால் உபபொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதை தவிர நகரின் பிரதான பகுதிகளில் 156 ஆவின் பாலகங்கள் முகவரால் நடத்தப்பட்டு வருகிறது. மேற்குறிய அனைத்து பாலகங்களிலும் பால் மற்றும் பால் உபபொருட்கள் தங்குதடையின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.
- மேலும் ஊரடங்கை கருத்தில் கொண்டு சென்னை புறநகர் பகுதிகளில் பால் விநியோகம் செய்வதற்க்காக 20 நடமாடும் பால் விற்பனை வாகனங்கள் இயக்கப்படுகின்றன.

- நகரின் முக்கிய பகுதி மற்றும் புறநகர் பகுதிகளில் 40க்கும் மேற்பட்ட தற்காலிக பால் விற்பனை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. அது மட்டும் இல்லாமல் 27 வட்டார அலுவலகங்கள் மற்றும் 48 பால் கூட்டுறவு நுகர்வோர் சங்கங்கள் தற்காலிக பால் விற்பனை மையமாக மாற்றப்பட்டுள்ளன.

- இதேபோன்று தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு மாவட்டங்களிலும் நடமாடும் விற்பனை வாகனம் மற்றும் தற்காலிக விற்பனை மையம் அமைத்து பொது மக்கள் அனைவருக்கும் தங்கு தடையின்றி பால்

மற்றும் பால் பொருட்கள் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் அனைத்து மாவட்ட ஆவின் பாலகங்களில் போதிய பால் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

- நீண்ட நாட்கள் கெடாத டெட்ரா பேக் பால் பாக்கெட்டுகளை அனைத்து ஆவின் பாலகங்களிலும் போதிய இருப்பு வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- ஆவின் பாலகங்களின் மூலம் நுகர்வோர் இல்லங்களுக்கு பால் மற்றும் பால் உபபொருட்கள் விநியோகம் செய்வதற்காக **ZOMATO** மற்றும் **DUNZO** நிறுவனங்களுடன் ஆவின் நிறுவனமும் இணைந்து சேவை செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் தினம் தோறும் 600 க்கும் மேற்பட்ட ஆர்டர்கள் நுகர்வோர்கள் மூலம் பெறப்பட்டு ரூபாய் மூன்று இலட்சம் மதிப்புள்ள பால் உபபொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.
- சென்னை மாநகரின் அனைத்து பகுதிகளுக்கும் தங்குதடையின்றி பால் விநியோகம் நடைபெற சென்னை மாநகரிலுள்ள அம்பத்தூர், மாதவரம் மற்றும் சோழிங்கநல்லூர் பால் பண்ணைகளில் பால் பாக்கெட்டுகள் உற்பத்தி 24 மணி நேரமும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.
- பொது மக்களுக்கு பால் விநியோகம் தங்கு தடையின்றி நடைபெறுவதை கண்காணிக்க 24 மணி நேர வாடிக்கையாளர் சேவை மையம் மற்றும் பகுதி வாரியாக சிறப்பு குழுக்களை அமைக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்:044–23464575, 23464576, 23464578 மற்றும் கட்டணமில்லா தொலைபேசி எண் 1800 425 3300.

இன்று (24.05.2021) முதல் தளர்வில்லா ஊரடங்கு தமிழ்நாடு முழுவதும் அமல்படுத்தப்பட்டதை முன்னிட்டு சென்னை மாநகரின் அனைத்து இடங்களிலும் பால் விநியோகம் தங்குதடையின்றி கிடைக்க மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் அவர்கள் தற்காலிக விற்பனை நிலையங்களை தாம்பரம், சோழிங்கநல்லூர் மற்றும் நங்கநல்லூர் பகுதிகளில் விநியோகம் செய்ய அனுப்பிவைத்தார்.

தாம்பரம் பஸ் நிலையம் அருகில் அமைந்துள்ள தற்காலிக விற்பனை மையத்தையும் மற்றும் கிழக்கு தாம்பரம் கேம்ப் ரோடு பகுதியிலுள்ள ஆவின் பாலகத்தையும் மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் மற்றும் ஆவின் மேலாண்மை இயக்குனர் அவர்கள் ஆய்வு செய்தனர். இந்த ஆய்வின் போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொதுமக்களிடம் ஆவின் பால் சரியான விலையில் விற்கப்படுகிறதா என்பதனை உறுதி செய்தார். ஆய்வின்போது தாம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. S.R. ராஜா உடன் இருந்தார்.

இதனைத்தொடர்ந்து சென்னை முகப்பேர் DAV பள்ளி அருகிலுள்ள அதிநவீன ஆவின் பாலகத்தை மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் திரு. சா.மு.நாசர் அவர்கள் மற்றும் ஆவின் மேலாண்மை இயக்குநர் முனைவர் இரா. நந்த கோபால் இ.ஆ.ப அவர்கள் ஆய்வு செய்து துப்புரவு பணியாளர்களுக்கு ஆவின் பாலினை விற்பனை செய்தனர். ஆய்வின்போது அம்பத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல், ஆவின் இணை நிர்வாக இயக்குனர் மற்றும் ஆவின் விற்பனை பிரிவு உயர்அதிகாரிகள் உடன் இருந்தனர்.

**மேலாண்மை இயக்குனர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

.